# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW-9

| | | | |
|---|---|---|---|
| Name | : லட்சுமணன் | Caste | : |
| S/o. | : பெரியண்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 01.12.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் தாரமங்கலம் ராமிரெட்டிப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் லோடிங் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 11.01.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு கருக்குப்பட்டி குமார் என்பவரின் விவசாய கிணற்றின் அருகில் போலிஸ் மற்றும் கூட்டம் இருந்ததால் நான் குமாரின் கிணற்று அருகே சென்றேன். தாரமங்கலம் ஆய்வாளர் கேட்டுக்கொண்டபடி ஆஜர் எதிரி அடையாளம் காட்டியதன் பேரில் கிணற்றுக்குள் உள்ளே இறங்கி தேடியபோது ஒரு டீ சர்ட், ஒரு துண்டு,

ஒரு லுங்கி, மரக்கட்டை, 25 கிலோ அரிசி சாக்கு ஆகியவற்றை மேலே எடுத்து கொடுத்தேன்.

மேற்படி பொருட்கள்தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பொருட்கள் ஆகும். ரத்தக்கறை படிந்த டீ சர்ட், ரத்தக்கறை படிந்த லுங்கி மற்றும், ரத்தக்கறை படிந்த துண்டு ஏற்கனவே சா.பொ.1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. ரத்தக்கறை உள்ள மரக்கட்டை சா.பொ.4 ஆகும். அமுதம் கோல்டு EXTRA LENGTH ஸ்பெசல் கிச்சடி பொன்னி அரிசி என்ற எழுத்துக்கள் உடைய கருப்பு கோல்டு சிகப்பு, வெள்ளை கலர்கள் உள்ள 25 கிலோ அரிசி பிடிக்கக்கூடிய காலி நூல் சாக்கு பை ஒன்று ரத்தக்கறையுடன் உள்ளது சா.பொ.5 ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை 11.01.2023ம் தேதி விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.